யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 203 ஆங்கீரச ஆனி 03 ( 17 . 06 . 1992 ) புதன்


## கடற்படையினர் கூறுகின்றனர்
## நிவாரணம் தரப்படுகிறது உங்களுக்கு ஏன் தொழில்?

அரசு நிவாரணம் தருகின்றது அத்துடன் கடல் முதிரையும் தருகின்றது உங்களுக்கு ஏன் மீன்பிடித் தொழில்? மீண்டும் இவ்விடத்தில் உங்களைக் கண்டால் சுடுவோம்" இவ்வாறு கல்முனைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு மீன்பிடித்துக் கொண்டிருந்த குருநகர் மீனவர்களைப் பிடித்து கடற்படையினர் கூறி விடுவித்ததாக தப்பிவந்த மீனவர் ஒருவர் தெரிவித்தார். மேலும் இந்த கடற்படையினர் ரோந்து அடிக்கடி நிகழ்வதனால் கரையோரத்தில் இருந்து சுமார் — 04 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பை ஏற்கமுடியாது

## ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு

வடக்கு கிழக்குப் பிரச்சினையின் தீர்வின் ஒரு பகுதியாக வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பதான கோரிக்கையை ஏற்க முடியாது என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார் கொழும்பில் நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த தமிழ்க் கட்சிகளிடம் அவர் இத்தகவலை வெளியிட்டதாக இந்திய வானொலி நேற்று தெரிவித்தது.

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது குறித்த கோரிக்கையை அரசு ஏற்க மாட்டாது, 1989 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது அந்த நிலைப்பாட்டில் அரசு இன்னும் மாற்றம் செய்யவில்லை எனவும் பிரேமதாஸ தெரிவித்தாராம்.

இனப்பிரச்சினை தீர்வின் அடிப்படை அம்சமாக வடக்கு கிழக்கு இணைந்த ஒரே தமிழர் தாயகம் என்ற கோரிக்கையை தமிழர் தரப்பில் வலியுறுத்தப்பட்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

... 04ஆம் பக்கம் பார்க்க

### மண்டைதீவு கீரிமலை
## ஷெல் தாக்கு

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 11 மணியளவில் யாழ் நகரை நோக்கி இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

இதேவேளை கீரிமலை - சேந்தாங்குளம் பகுதியில் இருந்தும் இராணுவத்தினர் நேற்று மாலை குடிமனைகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (47)

## அலம்பிலில் அதிகாரி பலி

முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலில் இராணுவ அதிகாரி யொருவரும் பலியானதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

புலிகள் நடத்திய இந்த அதிரடி தாக்குதலில் 6 படையினர் பலியானது தெரிந்ததே.

### ● ஹெலிகப்டரும் துப்பாக்கிப்பிரயோகம்
## தீவக முகாம்களிலிருந்து இரவு ஷெல் தாக்குதல்கள்

நேற்று முன்தினமிரவு 11மணி தொடக்கம் தீவகப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களிலிருந்து யாழ்.கரையோரப்பகுதிகளை நோக்கி ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

படையினர் ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டிருந்த வேளையில் ஹெலிகப்டர் ஒட்டும் (?) துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டபடியிருந்தது.

பலாலி இராணுவமுகாமிலிருந்தும் கரையோரப்பகுதி, கொட்டடி, நாவாந்துறை, கல்லுண்டாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கியும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அத்துடன் அராலித்துறைக்கும் காரைநகருக்குமிடையில் நங்கூரமிட்டுள்ள கடற்படைப் பீரங்கிக் கப்பலிலிருந்தும் பீரங்கித்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டபடியிருந்தன.

கரையோரப்பகுதி மக்கள் பீதியுடன் அகப்பட்டபொருள் — 04ஆம் பக்கம் பார்க்க

## இந்திய தூதரக அதிகாரி மீது பாகிஸ்தானில மீண்டுமே தாக்குதல்

இந்தியத் தூதரக அதிகாரி ஸ்ரீவத்சவா என்பவர் மீண்டும் தாக்குதல் முயற்சிக்கு உள்ளாகியுள்ளார்.

நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் ஸ்ரீவத்சவா காரில் பயணம் செய்து கொண்டிருந்த போது இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் இவரது காரை நோக்கி தாக்குதலை ஆரம்பித்தனர்.

இதனால் இவரது கார் முற்றாக நாசமானது எனினும் ஸ்ரீவத்சவா தப்பியோடினார். அப்போதும் இவர் மீது மூன்று முறை அந்த துப்பாக்கி நபர்கள் தாக்குதல் நடத்தினர்,

எனினும் அவர் எப்படியோ தப்பியோடி அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தினுள் நுழைந்து கொண்டார். அந்த பொலிஸ் நிலைய அதிகாரி தாக்குதல் நடத்திய அந்நபர்களை பிடிக்க முயன்றும் அவர்கள் தப்பியோடி விட்டனராம்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து பாகிஸ்தானில் உள்ள ... 04ஆம் பக்கம் பார்க்க

### ★ வங்கியாளர் பரீட்சை
## சித்தியடைந்தோரை யாழ் அரச அதிபர் அழைக்கிறார்

1990 ஆம் ஆண்டு நடைபெற்ற வங்கியாளர் பரீட்சையில் சித்திபெற்று இதுவரை வேலை கிடைக்காமல் யாரராவது யாழ் மாவட்டத்தில் இருந்தால் உடனடியாக தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

இப்பரீட்சை கொழும்பில் 1990 ஆம் ஆண்டு நடைபெற்றது என்னும் யாழ் மாவட்டத்தில் இருந்து இப்பரீட்சைக்கு தோற்றி சித்தி பெற்ற பெரும்பாலானோருக்கு வங்கிகளில் வேலை வாய்ப்பு வழங்கப்பட வில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

யாழ் மாவட்டத்தில் உள்ள வங்கிகளின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (47)

## வலி வடக்கு அகதிகளுக்கு நிவாரணம் தொடருமா ?

கடந்த மாதம் 30 ஆம் 31 ஆம் திகதிகளில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்துள்ள வலிகாமம் வடக்குப் பகுதி மக்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் கிடைக்காது எனத் தெரிய வருகிறது.

இவர்களுக்கு தற்போது மூன்று வாரங்களுக்கு மட்டுமே இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுகிறது

மேலும் தொடர்ந்து இவர்களுக்கு நிவாரணம் வழங்க புனர்வாழ்வு அமைச்சிடமிருந்து இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை எனச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

இது குறித்து யாழ் அரசாங்க அதிபர் கொழும்புடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. 47

## செஞ்சிலுவைக் குழுவினர் தீவுப்பகுதி செல்வர்

சர்வதேச செஞ்சிலுவைக் குழு அடுத்தவார முற்பகுதியில் தீவுப்பகுதிக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் தீவு பகுதியைச் சேர்ந்த நோயாளிகளையும் இவர்களுக்கு துணையாக வந்தவர்களையும் குமணாப்பலில் தீவுப்பகுதிக்கு ஏற்றிச் செல்வதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

மீண்டும் இவர்கள் தீவுப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போது அங்கு எதுவித சிகிச்சையும் இன்றி அவதிப்படும் நோயாளிகளையும் ஏற்றிவருவார்கள் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (47)

## கரடியனாறில் 4 படையினர் பலி

மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 4 படையினர் பலியானதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## கிளிநொச்சியில் வாகன விபத்து பத்துப் பயணிகள் காயம்

ஓமந்தையில் இருந்து பயணிகளை ஏற்றிவந்த மினிபஸ் ஒன்று கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் உழவு இயந்திரத்துடன் மோதியதால் மினிபஸ்ஸில் பயணம் செய்தவர்களில் பத்துப்பேர் வரை படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் வைத்திய சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

உழவுயந்திரமும், மினிபஸ்ஸும் பலத்த சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (47)

### அச்சுவேலியில்
## ஞாயிற்றுக்கிழமை கடைகள் திறக்கும்

அச்சுவேலியில் மீண்டும் ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படுகின்றன முன்னர் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை நாளாக அமுல் செய்யப்பட்டு கடைகள் மூடப்பட்டன (43)

## கைதான ராமதாஸ் வேலூர் சிறையில்

விவசாயிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தி நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் 15 நாள் காவலில் வேலூர் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே ராமதாஸ் கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து நேற்று அவரின் கட்சித் தொண்டர்கள் கல்லெறி தீவைப்பு சம்பவங்களில் ஈடுபட்டிருந்தனர்.

அம்பத்தூர் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் மீது நடைபெற்ற கல்லெறியில் அவர் தலையில் காயமடைந்தார். இரு லொறிகள் தீக்கிரையாக்கப்பட்டன, பல பஸ்கள் கல்லெறிக்குள்ளாகின.

இதேசமயம் கைதான ராமதாஸை விடுதலைசெய்யுமாறு தமிழக ஜனதாதள் கட்சித் தலைவர் சிவாஜி கணேசன் தமிழக அரசை கோரியுள்ளார்.

# 1993 இல் அரச, வங்கி விடுமுறை தினங்கள்

அடுத்த வருட அரசாங்க, வங்கி விடுமுறை தினங்களாக 29 தினங்களை பொது நிர்வாக மாகாண சபைகள், உள்விவகார அமைச்சு பிரகடனப் படுத்தியுள்ளது. அவை வருமாறு:

ஜனவரி 8- போயா தினம், ஜனவரி 14- தைப்பொங்கல், பெப்ரவரி 4- தேசியதினம், பெப்ரவரி 6 - போயா தினம், பெப்ரவரி 19 - மகாசிவராத்திரி, மார்ச் 7 - போயாதினம், மார்ச் 25 - புனித ரம்ழான் தினம், ஏப்ரல் 6- போயா தினம், ஏப்ரல் 9- பெரிய வெள்ளி, ஏப்ரல் 13 - புது வருட முதல் நாள், ஏப்ரல் 14- புதுவருடப்பிறப்பு, மே 1- மே தினம், மே 5 -வெசாக்போயா, மே 6 – வெசாக் மறு தினம், மே 22 தேசிய வீரர் தினம், மே 31- ஹஜ்பெருநாள், ஜூன் 4- பொசன் போயா, ஜூன் 30 - விசேட வங்கி விடுமுறை, ஜூலை 3- எசல போயா, ஆகஸ்ட் 1 – போயா தினம், ஆகஸ்ட் 30 - மீலாதுன் நபிதினம், ஆகஸ்ட் 31- போயாதினம், செப்டம்பர் 30- போயா தினம், அக்டோபர் 30- போயா தினம், நவம்பர் 13 - தீபாவளி, நவம்பர் 28- போயா தினம், டிசம்பர் 25 நத்தார் தினம், டிசம்பர் 28- போயாதினம், டிசம்பர் 31- விசேட வங்கி விடுமுறை

# 'தெமழா' என அழைத்து எம். பிக்கு சபையில் அவமதிப்பு

"சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட எம். பி. யான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயை 'தெமழா' என அரசாங்கக் கட்சி எம். பிக்கள் முன்னர் சபையில் அழைத்துள்ளார்கள். இதை இல்லை என அரசாங்கத் தரப்பினர் மறுக்கட்டும் பார்க்கலாம்,"

இவ்வாறு சுதந்திரக்கட்சி எம். பி கமால் கருணநாயக்க பாராளுமன்றத்தில் சவால் விடுத்தார்,

அவர் மேலும் பேசுகையில் 'தெமழா' என்று நாம் தமிழ் சகோதரர்களை அழைப்பதில்லை, 'திராவிட சகோதரய' என்று பண்பாக அழைப்பதே வழக்கம். 'தெமழா' என்பது கொச்சை வார்த்தையே என்றார்.

# கம்யூனிஸ்ட் கட்சிமீது பகிரங்கக் குற்றச்சாட்டு

முன்னாள் சோவியத் யூனியனில் செயற்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி வெளிநாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் இடதுசாரி பயங்கரவாதிகளுக்கும் உதவியளித்தமை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது

இப்படிப் பகிரங்கப்படுத்துவதன் உள்நோக்கம் நீதிமன்றத் தீர்ப்பு எதுவும் இன்றி சோவியத் யூனியனில் பொலிஸ் செவிக் கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டதை தற்போதைய ரஷ்ய அரசு நியாயப்படுத்துவதற்கும் அதே நேரம் ரஷ்யாவில் நிகழ்ந்து வரும் சீர்திருத்தங்களைக் குறைகூறும் கொர்பச்சேவுக்கு எச்சரிக்கை விடுக்கவுமே என 'இந்து'ப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

# சுதந்திரக்கட்சி பண்டாரநாயககளினது அல்ல

"ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்குப் பின் கட்சித் தலைவர் பதவிக்கு நானும் போட்டியிடுவேன் வேறு எவரும் போட்டியிடலாம். சுதந்திரக்கட்சி பண்டாரநாயக்கவின் கட்சியல்ல, யூ.என்.பி பிரேமதாஸவை ஜனாதிபதியாக்க முடியுமானால் ஏன் நாம் அப்படிச்செய்ய முடியாது?" என சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்க கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் "விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையினாலேயே நாம் இன்று பாராளுமன்றத்தில் உள்ளோம். இந்தத் தேர்தல் முறையில்லையெனில் நான்கு பேருக்குமேல் சுதந்திரக்கட்சியினர் பாராளுமன்றத்துக்கு வந்திருக்கமாட்டார்கள்" எனவும் தெரிவித்தார்.

# இலங்கைச் சட்டத்தை ஆராய இந்திய சட்ட வல்லுநர்கள்

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு நாடு கடத்தும்படி இலங்கையிடம் உத்தியோக பூர்வமாக கோரிக்கை விடுவதற்குமுன் இலங்கையின் சட்ட ஏற்பாடுகளை ஆராய்வதற்காக இந்திய புலனாய்வு தாபன சட்ட வல்லுநர் குழுவொன்று கொழும்பு வருமென செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்குழுவில் இடம் பெறும் சட்ட வல்லுநர்கள் இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் கொழும்பில் பேச்சு நடத்துவர் எனவும், இவர்கள் இங்கு வருவதற்கான அனுமதியை வெளிவிவகார அமைச்சு வழங்கியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# அந்த முயற்சி பலிக்காது என்கிறார் தி. மு.க தலைவர்

வை. கோபாலசாமிக்கும், மு. க ஸ்டாலினுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாகத்தான் தி. மு. க தேர்தலில் (சமீபத்தில் நிகழ்ந்த) அடும் மோதல்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறதே? என தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதியிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

"தி. மு.கவை பிளக்க 1972 இல் மத்திய மாநில அரசுகள் நடத்திய முயற்சிபோல் இப்போதும் அரசு உளவு அதிகாரிகளுடன் சில பத்திரிகைகளும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் அந்த முயற்சி பலிக்கவில்லை, பலிக்காது.

● வர்மா கமிஷன் அறிக்கை

# இந்திய உளவுப் பிரிவு கவனயீனமாக இருந்துள்ளது

கடந்த வருடம் மே மாதம் நிகழ்ந்த ராஜீவ்காந்தி கொலையை உளவு அறியும் நிறுவனங்கள் தடுத்திருக்கலாம் என்று இக்கொலை நிகழ்ந்த சூழல், பாதுகாப்பு ஏற்பாடு பற்றி விசாரணை நடத்திவரும் நீதிபதி வர்மா தெரிவித்துள்ளார்.

உளவறியும் நிறுவனங்கள் மேலும் கவனமாகச் செயற்பட்டிருக்க வேண்டும் என்று அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்

295 பக்கங்கள் கொண்ட இவ்வறிக்கை உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வறிக்கையை மதிப்பீடு செய்து மத்திய அரசு பின்னர் அதுபற்றி கருத்து வெளியிடும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வலைபந்தாட்ட முடிவுகள்

நல்லூர் தெற்கு சன சமூக நிலையம் நடாத்தும் வலைபந்தாட்டப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நிலைய மைதானத்தில் இடம் பெற்ற போட்டியில் பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவு அணியை அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 18:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் கடும் போட்டியின் பின் தோற்கடித்தது. 16

## அறிக்கை சமர்ப்பிப்பு

ராஜீவ்காந்தி கொலைக்கு பாதுகாப்புக் குறைபாடுகள் காரணமா என்பதை ஆராய நியமிக்கப்பட்ட வர்மா ஆணைக்குழு அதன் விசாரணை அறிக்கையை நேற்று முன்தினம் புதுடில்லியில் அரசிடம் சமர்ப்பித்தது.

## சென்றலைற்ஸ் சாம்பியனானது

சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தி வந்த டொனால்ட் கனே சகுமார் வெற்றிக் கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட பந்து மாற்றங்களைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன் ஆனது. (16)

## ஈச்சமோட்டை அணி வெற்றி பெற்றது

கொழும்புத்துறை ஜெற்லைன்ஸ் விளையாட்டுக்கழகம் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்துடன் இணைந்து நடாத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் 12 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில், ஈச்சமோட்டை அணி அதனை எதிர்த்தாடிய கலை ஒளி விளையாட்டுக்கழக அணியை 40 ஓட்டங்களால் தோற்கடித்தது. (16)

# ராமதாஸுக்கு 15 நாள் காவல்!

தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்ய முயன்றதாகத் திண்டிவனத்தில் வைத்து கைது செய்யப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் பதினைந்து நாள் காவலில் வைக்கப் பட்டுள்ளார்

மாநிலம் முழுவதும் தம் தொண்டர்கள் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதானோரை உடனடியாக விடுதலை செய்யுமாறு தி மு க தலைவர் கலைஞர் மு. கருணாநிதி கேட்டுக் கொண்டுள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சி வன்முறைப் போராட்டத்தில் இறங்காத வேளையில் அதன் தலைவர்களும், தொண்டர்களும் கைது செய்யப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது என அவர் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

# பௌத்த குருமார் சொற்களை முழுமையாக ஏற்க முடியாது

- சு: க. எம். பி.

"நன்னீர் மீன் வளர்ப்புத் தடை செய்யப்பட்டதால் பலர் வருமானம் இழந்துள்ளனர். பௌத்த மதகுருமார் சொற்படி இந் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. அவர்கள் சொற்படி முழுமையாக செயற்பட முடியாது. நன்னீர் மீன்வளர்ப்பு ஜீவனோபாயத்துக்குரிய தொழில். இத்தகைய தொழிலை தடை செய்யுமாறு புத்தர் கூறியுள்ளாரா?"

இவ்வாறு சுதந்திரக்கட்சி எம்.பி. மகிந்த விஜேசேகர பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

# சமாதான முயற்சியில் மக்களின் முழுச்சக்தியும் பயன்பட வேண்டும்

- ஜனாதிபதி

"மிகிந்த ஜெயந்தி ஆண்டு முடிவதற்குள் வடக்குக் கிழக்கில் சமாதானம் ஏற்பட வேண்டும். இதுவே எமது பேரவா."

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ மிகிந்தலையில் உரையாற்றுகையில் தெரிவித்தார்

இந் நாட்டு மக்கள் அனைவரும் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் தமது சக்தி முழுவதையும் பயன்படுத்த வேண்டுமெனவும் அவர் அங்கு தெரிவித்தார்

# மர உச்சியில் ஏறி இருந்து கதிர்காமத்தில் சத்தியாக்கிரகம்!

கதிர்காமம் பஸ் நிலையத்தில் கடை கட்டிடம் கோரி விண்ணப்பித்த ஒருவர் அது இல்லாமல் தடைப்படுத்தியதை மர உச்சியில் ஏறிநின்று தனது எதிர்ப்பைத் தெரிவித்து சத்தியாக்கிரகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது,

காலையிலிருந்து மரத்தில் ஏறியிருந்த டபிள்யூ. ஏ. சில்வா என்ற நபர் பின்னர் சாதகமான பதில் கிடைக்கும் பெற்றதையடுத்து மாலையில் தனது போராட்டத்தைக் கைவிட்டார்.

# திருமலைத் தமிழர்களுக்கு பன்குளத்தில் போட்டிப்பரீட்சை

தமிழர்களே செல்ல முடியாத ஒரு பகுதியில் தமிழ் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை மண்டபங்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட சம்பவம் திருமலை மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது.

கிராம சேவையாளர் தெரிவுக்கு விண்ணப்பித்த திருமலை மாவட்ட தமிழ் பரீட்சார்த்திகளே இந்த இக்கட்டு நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் பன்குளத்தில் உள்ள மகாவித்தியாலயத்தில் பரீட்சை எழுதுமாறு பணிக்கப்பட்டிருந்தனர்.

# சிவநாயகம் விடயத்தில் இலங்கை பத்திரிகையாளர்

கடந்த ஒரு வருட காலத்திற்கு இந்தியச்சிறையிலிருக்கும் இலங்கையின் முன்னணிப் பத்திரிகையாளரும், 'சற்றடே றிவியூ' பத்திரிகையாசிரியருமான எஸ்.சிவநாயகத்தின் நிலை பற்றி அரச எதிர்ப்பு சிங்களப் பத்திரிகைகள், "பத்திரிகைச் சுதந்திரத்திற்காக போராடுகிறோம் எனக்கூறிக் கொண்டு கூட்டங்கள் நடத்துகின்ற இலங்கைப் பத்திரிகைத் துறையினர் இது வரை எதுவித கருத்தையும் ஏன் தெரிவிக்கவில்லையென சண்டே ஒப்சேவரில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் அனுரத்த திலகசிறி கேள்வி எழுப்பியுள்ளார்.

அவருக்குச் சார்பாக சர்வதேச மன்னிப்புச்சபை சர்வதேச 'ஆலேட்' நிறுவனம் ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் அமைப்புக்கள் ஆகியவற்றிற்கு ஏன் இவர்கள் புகார் செய்யவில்லை? எனவும் அவர் வினவியுள்ளார்.

# மன்னாரில் வயிற்றோட்டம்; தடுப்புமருந்து அங்கு இல்லை!

மன்னாரில் வயிற்றோட்ட நோய் தீவிரமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்பத்திரியிலும், தனியார் கடைகளிலும் மருந்துகள் இல்லாததால் நோயாளிகள் அவதிப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

★ 'ஜூனியர் விகடன்' தகவல்

# தமிழக இளைஞர்கள் மத்தியில் புலிகளுக்கு ஆதரவு பெருகுகிறது!

தமிழகப் பொலிசுக்குச் சவால் விடுத்துக்கொண்டிருக்கும் 'தமிழ்நாடு விடுதலைப் படை' என்னும் தீவிரவாத இயக்கம்பற்றிய சில தகவல்களை 'ஜூனியர் விகடன்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

மே 23ஆம் திகதி கும்பகோணம் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இந்த அமைப்பே காரணமென தமிழகம் பொலிஸார் கருதுகிறார்கள்.

கர்நாடக அரசு காவிரி நீரை தமிழகத்திற்கு வழங்காவிட்டால் தமிழகம் நெய்வேலியிலிருந்து கர்நாடகம் பெங்களூருக்கு மின்சாரத்தைக் கொண்டு செல்லும் பிரதான இணைப்புக்களைத் தகர்த்து விட 'தமிழ்நாடு விடுதலைப் படை' திட்டமிட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அந்தத் திட்டத்தை செயற்படுத்த முடியாததால்தான் கும்பகோணம் அஞ்சல் நிலையத்திற்கு அவர்கள் குண்டு வைத்திருக்கலாமெனவும் பொலிஸார் கருதுகின்றனர்.

இதேவேளை அரியலூர், ஜெயங்கொண்டம் பகுதியில் செய்தி சேகரிக்கச் சென்றிருப்பவர்கள் அங்குள்ள இளைஞர்கள் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையைக் கடுமையாக எதிர்ப்பதை தாம் நேரில் புரிந்துகொள்ள முடிந்ததெனத் தெரிவித்துள்ளனர்.

"புலிகள் இயக்கம் மீதான தடைக்கு வெளிப்படையாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கும் பாட்டாளி மக்கள் கட்சி மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டால் சும்மா இருக்கமாட்டோம்... அப்புறம் பாருங்கள்!" என்று அந்த இளைஞர்கள் சவால் விடும் பேசுவதாக ஜூ.வி நிருபர்கள் தெரிவித்துள்ளனர்.

"அந்தப் பகுதி இளைஞர்களிடம் புலிகளுக்குச் சந்தடியில்லாமல் ஆதரவு திரண்டு வருவதைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது" எனவும் ஜூனியர் விகடன் எழுதியுள்ளது.

## மூப்படைப் பலம்

இறிலங்காவின் மூப்படையின் ஆட் பலம் ஒரு லட்சத்து இருபதாயிரமாக அதிகரித்துள்ளதாக தெரியவருகிறது.

இராணுவத்தில் சுமார் ஒரு லட்சம் பேரும் விமானப்படையிலும், கடற்படையிலும் தலா பத்தாயிரம் பேரும் உள்ளனரென்றும் தெரியவருகிறது.

## ஒய்வூதியம்

தெல்லிப்பழை கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுவோர்க்கு மே மாதத்திற்குரிய ஓய்வூதியம் தற்போது சங்கிலியன் தரை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வூதிய வவுச்சர்கள் பெற்றுக் கொள்ளாதவர்களின் வவுச்சர்களும் இங்கு வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

## நடவடிக்கை

மன்னம்பிட்டியில் மீண்டும் முஸ்லிம்களைக் குடியமர்த்த நடவடிக்கையெடுக்கப்படுவதாக நேற்று வெளியான கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

# கும்பகோணம் குண்டுவெடிப்பு: புலி ஆதரவாளர்களின் வேலையாம்

சமீபத்தில் கும்பகோணத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு விடுதலைப்புலிகள் ஆதரவுக் குழு ஒன்றால் நடத்தப்பட்டதாக தமிழக பொலிஸ் மாஅதிபர் வோல்டர் தேவாரம் தெரிவித்துள்ளார்.

கும்பகோணம் தொலைக்காட்சி நிலையத்தில் இரவு வேளை குண்டு வெடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் ஆணையாளர் அறிக்கை

## எதிர்க்கட்சிகள் ராஜினாமா செய்யா

தேர்தல் ஆணையாளரின் அறிக்கை காரணமாக எதிர்க்கட்சிகள் இராஜினாமா செய்ய மாட்டா.

இவ்வாறு அநுரா பண்டாரநாயக்க கண்டியில் நடைபெற்றதொரு கூட்டத்தில் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளரின் அறிக்கை சிறிலங்காவின் எல்லாப் பகுதிகளிலும் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறவில்லை இரண்டு அல்லது மூன்று இடங்களில் இடம்பெற்ற முறைகேடுகளின் விபரங்களே தரப்பட்டுள்ளன.

ஆகவே இந்த அறிக்கையின் பேரில் நாம் இராஜினாமாச் செய்யவேண்டியதில்லை நாம் இராஜினாமாச் செய்வதால் பாராளுமன்றம் கலைக்கப்படப்போவதில்லை" எனவும் அவர் கூறினார்.

1977ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஒன்பது தடவை சுதந்திரக்கட்சி தேர்தலில் தோல்வி கண்டுள்ளது பதினைந்து வருடங்களாக எதிர்க்கட்சியில் இருந்திருக்கிறது.

லலித் - காமினி கட்சியுடன் சுதந்திரக்கட்சி எதுவிததொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் அநுரா பண்டாரநாயக தெரிவித்தார்.

# மினிபஸ் சாரதிகள் கொழும்பில் பகிஷ்கரிப்பு!

கொழும்பு - பாணந்துறை தனியார் பஸ்சேவை நேற்று முன்தினம் ஸ்தம்பிதமடைந்திருந்தது.

இதனால் வேலை முடிந்து வீடு திரும்பவேண்டிய பலர் பிரயாணக்காரர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

இந்த மார்க்கத்தில் சேவையிலீடுபடுத்தப்படும் தனியார் பஸ்களின் ஊழியர்கள் பொலிஸார் சிவிலுடையில் பஸ்களில் திடீர் பரிசோதனை செய்வதை ஆட்சேபித்து வேலைசெய்ய மறுத்ததே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

# 132 மினிபஸ் சாரதிகள் கொழும்பில் கைது!

கொழும்பில் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறும் தனியார் பஸ் சாரதிகள் மீது பொலிஸார் கடந்த சில தினங்களாக கடும் நடவடிக்கையெடுத்து வருகின்றனர்.

கடந்த புதன்கிழமைக்கும் வெள்ளிக்கிழமைக்கும் இடையில் மட்டும் போக்குவரத்து விதிகளை மீறியமைக்காக கொழும்பில் 132 சாரதிகளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# சர்வோதய இணைப்பாளர் பல லட்ச ரூபாவுடன் தலைமறைவு!

வவுனியா மாவட்ட சர்வோதய இணைப்பாளர் பணத்துடன் தலைமறைவாகிவிட்டதாக வவுனியாப்பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் சர்வோதய இயக்கத்துக்கு உரிய ஐந்தரை இலட்சம் ரூபாபணத்துடன் தலைமறைவாகிவிட்டதாக அநுராதபுரம் பிராந்திய சர்வோதய இணைப்பாளர் டபிள்யூ. எம். ஐயந்தி குணசேகர முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா மாவட்ட இணைப்பாளருடன் சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்த வேறு நால்வரும் தலைமறைவாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விவகாரம் தொடர்பாக வவுனியா சர்வோதய கணக்காளர் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார்.

# நிலையியற் கட்டளைகளின்படி பாராளுமன்ற அலுவல்கள்

பாராளுமன்ற அலுவல்களை நடாத்துவதில் நிலையியற் கட்டளைகளைப் பின்பற்றுவது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது எதிர்க்கட்சிகளும் இதற்கு இணங்கியுள்ளதாகத் தெரிகிறது. இதன்படி நிர்ணயிக்கப்பட்ட நேரங்களிலே சபை கூடியும் ஒத்திவைக்கவும் படும்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிலையியற் கட்டளைகளின் படி நேரம் ஒதுக்கப்படும், இதனால் நேரம் நீடிப்பு வழங்கப்படமாட்டாது.

எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் இனிமேல் பதில் அளிப்பார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# எட்டாம் வகுப்புபடித்தோருக்கும் மௌலவி ஆசிரியர் பதவி

"எட்டாம் வகுப்பு சித்தியடைந்த 700 முஸ்லிம்களுக்கு மௌலவி ஆசிரியர் நியமனம் வழங்கியது சுதந்திரக்கட்சிதான்" என்று சுதந்திரக்கட்சி எம். பி. டி. எம் ஜெயரத்ன பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

"இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு உரிய இடமும், அந்தஸ்தும் கொடுத்தது தமது கட்சிதான் என்று அவர் விளக்கமளித்தும் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

# ஜெயலலிதா சொன்னதாலேயே பண்ருட்டியைத் தாக்கினேன்

- தாமரைக்கனி

தற்போதைய தமிழக சட்ட சபையின் ஒரே சுயேச்சை உறுப்பினர் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி எம். எல். ஏ, தாமரைக்கனி.

எப்போதுமே அதிரடி பாணிதான் அவருடையது. இப்போதும்கூட ஏராளமான பொலிஸ் வழக்குகள் அவர் மீது இருக்கின்றன. சிறையிலிருந்த அனுபவமும் அவருக்குண்டு.

அண்மையில் சட்டசபையில் பண்ருட்டி ராமச்சந்திரனைத் தாக்கி சர்ச்சையை ஏற்படுத்தியவர் இவர், அந்தத் தாக்குதலுக்கு என்ன காரணமென்பதை இப்படித் தெரிவித்தார்:

நான் ஜெயிச்சவுடனே நேரா போயஸ் கார்டன் போய் அம்மாகிட்டே ஆசீர்வாதம் வாங்கினேன்,

ஜெயலலிதா என்னைப் பார்த்து சிரிச்சுக்கிட்டு 'நீங்க ரிஸைன் பண்ணுங்க. இடைத் தேர்தல்ல இரட்டை இலைச் சின்னம் தர்றேன்'னு சொல்ல எனக்கும் சரினு ஆயிருச்சு, லட்சக்கணக்கில பணத்தைக் கட்டியும் ஸீட் கிடைக்காம ஏமாந்தவங்க கதைதான் எனக்குத் தெரியுமே. அதனால நாசூக்கா மறுத்துட்டேன்.

அப்புறம் செட்டியபட்டி முத்தையா என்னைக் கூப்பிட்டு 'சட்ட சபையில் பண்ருட்டி, திருநாவுக்கரசு போன்றவர்களால் பிரச்சினை வரும்போது அ.தி.மு.கழக எம்.எல்.ஏக்கள் எழுந்தால் நிலைமை மோசமாகிவிடும், அதனால அவங்களைச் சமாளிக்க வேண்டியது உங்க பொறுப்பு... இதை மேடம்தான் சொல்லச் சொன்னாங்க' ன்னாரு தாய் சொல்லைத் தட்டாதேன்னு தலைவர் சொல்லியிருக்காரே... அதனால அம்மாவே சொல்லிட்டாங்கன்னுதான் பண்ருட்டி அண்ணனை அடிச்சுட்டேன். ஆனா, அப்புறம் வருத்தப்பட்டேன்.

# எதிரிகளின் இதயங்களை வென்றெடுப்போம்

- பிரேமா

இந்த வருடத்துக்குள் எமது எதிரிகளின் இதயங்களை வென்றெடுப்பதன் மூலம் முழு சமூகத்திற்கும் மகத்தான வெற்றியை அரசினால் ஈட்ட முடியும் என ஜனாதிபதி பிரேமதாச தம்புத்தேகமவில் இடம் பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

# வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்கவேண்டும்

-விஜய் காந்த்

சமீபத்தில் திண்டுக்கல் வந்திருந்தார் விஜய்காந்த் தன்னைப் பார்க்கக் கூடியிருந்த பெரும் கூட்டத்தைப் பார்த்து நெகிழ்ந்து போய்விட்டார் அவரது பேச்சின் நடுவே ஆவேசம் தெறித்தது...

"தமிழ் இனம் தாழ்ந்து போகக்கூடாது. எத்தனை காலம்தான் நாம் தாழ்ந்து கிடப்பது? வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்க வேண்டும்.

நான் நடித்த 'ஏழை ஜாதி' படம் தமிழ் உணர்வை வளர்க்கும் வகையில் எடுக்கப்பட்டிருக்கிறது தற்போது உள்ள தமிழகச் சூழலில் அந்தப் படத்தில் நடித்ததற்காக என்னை அரசு கைது செய்தாலும் செய்யலாம்! இதை நான் விளையாட்டாகவோ வேடிக்கையாகவோ கூறவில்லை" என்று உணர்ச்சிவசப்பட்டார் விஜய்!

# ரயில்பாதை விஸ்தரிப்புக்கு பாகிஸ்தான் அரசு உதவி

தென்பகுதியில் மாத்தறையிலிருந்து கதிர்காமத்திற்கு புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதற்கு பாகிஸ்தான் அரசு இலங்கைக்கு உதவவுள்ளது.

இது தொடர்பான பேச்சுக்களை மேற்கொள்வதற்காக போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தலைமையிலான நால்வர் குழுவொன்று பாகிஸ்தானுக்குச் சென்றுள்ளது.

# தமிழகத்தில் 8000 பேர் கைது!

மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து இந்தியாவில் நேற்று நாடளாவிய ரீதியில் பொது வேலை நிறுத்தமொன்று மேற்கொள்ளப்பட்டது.

இதனை முன்விட்டு தமிழகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 8000 பேரை தமிழகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# நான்கு அம்சத் திட்டத்தின் விவரங்கள் அறிவிப்பு!

நேற்று முன்தினம் தமிழ்க்கட்சிகள் ஜனாதிபதியை சந்தித்த போது வடக்கு கிழக்கு பிரச்சினை தீர்வுக்கான நான்கு அம்சத் திட்டமொன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தன.

இந்த நான்கு அம்சத் திட்டத்தின் விவரங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு இணைப்பு, முஸ்லிம்களுக்கான தனியான அதிகாரப் பகிர்வு அலகு, பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் அரசியல் தீர்வைக் காணும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல், வடக்கு கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் சிறுபான்மையினர் அனுபவிக்கும் உரிமைகளை வடக்குக் கிழக்குப் பகுதியில் வாழுகின்ற சிங்கள மக்களுக்கு வழங்குதல் ஆகியனவே இத்திட்டத்தில் அடங்கியுள்ள நான்கு அம்சங்களுமாகும்.

★ ஒப்சேர்வர் மீதான வழக்கு

# நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து ஸ்ரீமாவோ மேன் முறையீடு

கொழும்பு மாவட்ட நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து எதிர்க்கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அப்பீல் நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்துள்ளார்.

லேக்ஹவுஸ் பத்திரிகையான 'ஒப்சேர்வர்' மீது 50 லட்சம் ரூபா மான நஷ்டம் கோரி திருமதி பண்டாரநாயக்கா தாக்கல் செய்த வழக்கை கொழும்பு மாவட்ட நீதவான் தள்ளுபடி செய்திருந்தார்.

1986 ஜனவரி 12ஆம் திகதி ஒப்சேர்வர் பத்திரிகையில் வெளியான கட்டுரை திருமதி பண்டாரநாயக்காவுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் அமைந்ததாக அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

# செயலகத்தின்பகுதிகளிலும் எழுதுவினைஞர் நியமனம்

யாழ் செயலகத்தில் உள்ள சில திணைக்களங்களுக்கும் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்த எழுதுவினைஞர் நியமிக்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களுக்கு சம்பள வழங்கும் அனுமதி கொழும்பிலுள்ள அந்தந்த திணைக்களங்களின் தலைமை அலுவலகங்களில் இருந்து கிடைத்ததும் இந்த நியமனம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் யாழ் சமூக சேவைத் திணைக்களத்துக்கு சிலர் நியமிக்கப்பட்டு பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (47)

# வீடுகளைப் பார்வையிட மக்கள் சென்றுவந்தனர்

இளவாலைப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் பலர் நேற்று தம்மது வீடுகளைப் பார்வையிட்டு வந்ததைக்காண முடிந்தது.

இதேநேரம் மேலும் பலர் தமது உடைமைகள் எடுத்து வருவதையும் காணமுடிந்தது.

பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் வீதிகளினூடாக மக்கள் பொருள்களுடன் வருவதையும் அவதானிக்க முடிந்தது.

# அம்பாந்தோட்டையில் பனை அபிவிருத்தி வேலை

அம்பாந்தோட்டைப் பகுதியில் பனை மரங்களை நடுவதற்கு ஐக்கிய நாடுகள் உதவித்திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பெரும் தோட்டத் தொழில்துறை ராஜாங்க அமைச்சர் அபுசாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இது தொடர்பான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் க. நடராசா உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# கிராமசேவையாளர் பரீட்சை தற்போது நடைபெறாது

கடந்த 13 ஆம் திகதி நாடு முழுவதும் நடைபெற்ற கிராமசேவையாளர்களுக்கான போட்டிப் பரீட்சை யாழ். மாவட்டத்தில் தற்போது நடைபெறமாட்டாது என செயலக வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

இப்பரீட்சைக்குரிய புதிய வினாத்தாள்கள் பரீட்சைப் பகுதியால் தயாரிக்கப்பட வேண்டும் எனவும் அதற்கு பல நாள்கள் எடுக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் பல இடங்களில் கிராமசேவையாளர் பதவிகள் வெற்றிடமாக இருப்பதாகவும், ஒரு கிராமசேவையாளரே பல பகுதிகளைக் கவனிக்க வேண்டியிருப்பதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (47)

# ஜெயலலிதாவுக்கு எதிராக தாமரைக்கனி மகஜர்

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கெதிரான மகஜர் ஒன்றை சிறிவில்லிப் புத்தூர் சட்டபேரவை உறுப்பினர் தாமரைக்கனி தமிழக ஆளுனரிடம் மே மாத இறுதியில் கையளித்துள்ளார்.

"டான்ஸி நிலத்தை வாங்கியதில் முதல்வர் ஜெயலலிதா முறைகேடாகத்தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறார், எனவே அவரை முதல்வர் பதவியிலிருந்து விலக்க வேண்டும்" என அந்த மகஜரில் தாமரைக்கனி கோரியுள்ளார்.

இது போன்ற மகஜர்கள் இந்திய ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கூட அனுப்பப்பட்டுள்ளன.

தமிழக சட்டசபையின் ஒரே ஒரு சுயேட்சை உறுப்பினரான தாமரைக்கனி முன்னர் அ. தி. மு. க சார்பில் சட்டபேரவை உறுப்பினராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சுற்றாடல் சூழல் வரியினால் பெற்றோலியப் பொருள்கள் விலை அதிகரிக்கும்

சுற்றாடல் சூழலுக்கு மாசு ஏற்படுத்தவல்ல சகல பெற்றோலிய உற்பத்திப் பொருள்களுக்கும் அகில உலக ரீதியில் சுற்றாடல் வரி விதிக்கப்படவேண்டும் என சர்வதேச மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் யூலை 5ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரவுள்ளது.

இதன்காரணமாக பெற்றோலிய உற்பத்திப் பொருள்களும் மற்றும் உப உற்பத்திப் பொருள்களும் விலையேறும் நிலை உருவாகியுள்ளது.

சுற்றாடல் சூழல் வரிச் சுமை இலங்கை மக்களையும் பாதிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

சுற்றாடல் சூழல்வரி அமுலுக்கு வந்ததும் பொலிதீன் உறைகள், பிளாஸ்ரிக்பொருள்கள் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கும். சுற்றாடலை மாசுறச் செய்யும் சொப்பிங் பைகள் ஆகியவற்றின் விலைகளும் அதிகரிக்கும்.

## பேசாலை அகதிமுகாமில் கொலரா பரவுகிறது

மன்னார்தீவு பேசாலையில் ஐ. நா. அகதிகளுக்கான அமைப்பினால் நடத்தப்பட்டு வரும் அகதிமுகாமில் கொலரா நோய் பரவிவருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதுவரை 8குழந்தைகள் இதனால் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## குமணவில் நோயாளிகள்

குமண கப்பலில் வரும் நோயாளர்கள் நேற்று திருகோணமலைக்கு பயணமானார்கள் இதேபோல சென்றமுறை கொழும்புசென்று சிகிச்சை பெற்ற நோயாளிகளும் நேற்று பருத்தித்துறைக்கு குமண கப்பலில் வந்தனர். (47-07

## மலையக ரயில் சேவை

மலையக ரயில்சேவை வழமைக்குத்திரும்பியுள்ளது. நாவலப்பிட்டிக்கு அருகில் அண்மையில் பெய்த மழை காரணமாக ரயில் என்ஜின் ஒன்று தடம்புரண்டதால் இந்த சேவை தடைப்பட்டிருந்தது.

## பன்னிரெண்டு நிலையங்களுக்கு அரச நன்கொடை

யாழ் மாநகர சபைப் பகுதியில் 64 பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் உள்ள போதிலும் 12 சனசமூக நிலையங்கள் மட்டுமே 1991 ஆம் ஆண்டுக்குரிய அரச நன்கொடைப் பணத்தை யாழ். மாநகர சபையிடமிருந்து பெற்றுள்ளனவாம்.

ஏனைய 52 சனசமூக நிலையங்களும் வருடாந்த அரச நன்கொடைப் பணத்தைப் பெறமுயலாது அலட்சியம் செய்து வருகின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 14

நிவாரணம்

ஒரு கலோ மீற்றர் தூரத்திலேயே மீனவர்கள் தொழில் புரிவதாகவும் அவர் தெரிவித்தார். 15

வடக்கு ..

அண்மையில் அநுரா பண்டாரநாயக்கா ஐலண்ட் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு அரசு எதிரான போக்கையே கொண்டிருப்பதாக தகவல் தெரிவித்திருந்தமை நினைவிருக்கலாம்.

தீவக ..

களை எடுத்துக்கொண்டு பாதுகாப்பு வலயப் பகுதி நோக்கிஓடிவந்து தஞ்சமடைந்தனர்.

நேற்றுக்காலை தொடக்கம் மாலைவரையும் தீவுப்பகுதியிலிருந்தும், காரைநகர், பலாலி முகாம்பகுதிகளிலிருந்தும் ஓயாத ஷெல்தாக்குதல்களை படையினர் பொன்னாலை, கல்லுண்டாய் அராலி வெளிப்பகுதிகளை நோக்கி மேற்கொண்டபடியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. 07

இந்திய...

இந்தியத் தூதவர் கண்டனம் வெளியிட்டார்

ஒரு மாதத்தினுள் இந்த அதிகாரி மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

இதைத் தவிர ராஷேஷ் மிட்டல் என்ற மற்றுமோர் இந்தியத் தூதரக அதிகாரியும் பாகிஸ்தான் புலனாய்வுத் துறையினரால் தாக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

# முகாம்களில் தங்கியிருக்க அகதிகளுக்கு அச்சம்

கடந்தவாரம் வலிகாமம் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து சங்கானை சண்டிலிப்பாய், உடுவில் ஆகிய இடங்களில் உள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ள மக்கள் இந்த அகதி முகாம்களில் தங்கியிருப்பதற்கு அச்சப்படுகிறார்கள்.

இதனால் இவர்கள் மரங்களின் கீழேயே தங்கியுள்ளார்கள் இவர்களைப் பராமரிப்பதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மிகவும் சிரமப்படுவதாகவும் இணையத்தின் செய்திகள் தெரிவிக்கின்றன.

சங்கானையில் உள்ள அகதிமுகாம்களில் 150 குடும்பங்களும், சண்டிலிப்பாயில் உள்ள அகதி முகாம்களில் 1000 குடும்பங்களும் உடுவில் உள்ள அகதி முகாம்களில் 600 குடும்பங்களும் தங்கியுள்ளார்கள் எனவும் இணையத்தின் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இளவாலை, மாதகல் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

மாதகல், இளவாலைப் பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் இடம் பெயர்ந்தவர்களுக்கு இலவச நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது:

இடம் பெயர்ந்த இடங்களில் இவர்கள் நிவாரண உதவி கேட்டபோது மேலிடத்தில் இருந்து அனுமதி கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. 47

# கொழும்பு - சென்னை விமான சேவைகள் ரத்து!

கொழும்புக்கும் சென்னை, பம்பாய்க்கு மிடையிலான விமான சேவைகள் நேற்று இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

எயர் இந்தியா விமான சேவை ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தமையே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐரோப்பிய சமுதாயத்தின் அலுவலகம் கொழும்பில்

ஐரோப்பிய சமுதாயம் இலங்கையில் நிரந்தர காரியாலயம் ஒன்றை விரைவில் அமைக்கவுள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய சமுதாயத்தின் தூதுவரை ஒழுங்கமைக்கும் முகமாகவே இக்காரியாலயம் திறக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# திருட்டு முயற்சி

இளவாலைப் பகுதியில் மக்கள் வெளியேறிய வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது

சில இடங்களில் திருட்டு முயற்சி இடம் பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# ஸ்ரீலங்கா போக்கில் மாற்றத்தை இந்தியா எதிர்பார்க்கவில்லை

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையில் இந்தியாவுடன் ஸ்ரீலங்கா மிக நெருங்கி ஒத்துழைப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

விசாரணைகள் பொருட்டு இந்திய அதிகாரிகள் செல்ல ஸ்ரீலங்கா அரசு உடனடி அனுமதி வழங்குகிறது. ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கையில் எம் மாற்றத்தையும் இந்தியா எதிர்பார்க்கவும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்

ஸ்ரீலங்கா அரசின் போக்கில் மாற்றங்கள் காணப்படுவதாக நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

## தென்மராட்சியில அபிவிருத்தி

தென்மராட்சிப் பகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதென்று யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு சங்க சமாசம் முடிவு செய்துள்ளதென்று தென்மராட்சியில் நடைபெற்ற சமாசத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுப் பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

இக்கூட்டம் நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலய மண்டபத்தில் ச. பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்றது. (14)

## கைது

புறக்கோட்டைப்பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் வடபகுதி இளைஞர்கள் சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இவர்களில் சிலர் வெளிநாடு செல்வதற்காக வந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லங்கா கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 17-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது